# அவதார்

# மெஹெர் பாபா



## வாழ்க்கைச் சுருக்கமும்,
## செய்திகளும்

*Tamil Series No: 1*

# AVATAR MEHER BABAVIN VAZHKAI CHURUKKAMUM SEIDIGALUM

*Compiled by : V. Sita Ramayya*

Words of Avatar Meher Baba
are Copyright © 1997,
Avatar Meher Baba P. P. C. Trust,
Ahmednagar

*Tamil Version Copyright © 1997*
*Avatar Meher Baba Tamilnadu Centre, Madras*

Cover Photo: Meelan Studio, Pune

*Published by:*
**Avatar Meher Baba Tamilnadu Centre**
36, East Mada Street,
Tiruvanmiyur,
Madras -- 600 041

## அவதார் மெஹெர் பாபாவின் வாழ்க்கைச் சுருக்கம்

மெஹெர் பாபா என்று புகழ் பெற்ற மேர்வான் ஷெரியார் இரானி என்பவர் பாரசீகப் பெற்றோருக்கு **1894** ஆம் ஆண்டு பிப்ரவரி 25 ஆம் நாள் இந்தியாவிலுள்ள பூனாவில் அவதாரம் செய்தார். அவருடைய தந்தையார் ஷெரியார் முண்டேகர் இரானி ஜொரஸ்தியன் கொள்கையைப் பின்பற்றியவர். கடவுளைக் கண்ட உண்மையான ஞானியும் ஆவார்.

மேர்வான் பூனாவிலுள்ள புனித வின்ஸெண்ட் உயர்நிலைப் பள்ளியிலும், தக்ஷிணக் கல்லூரியிலும் மாணவராய் இருந்தார். 1913ல் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது அவர் வாழ்வில் திடீர் நிகழ்ச்சி ஒன்று ஏற்பட்டது. அக்காலத்து முழு நிறைவு பெற்ற ஞானிகள் ஐவருள் ஒருவரான ஹஜ்ரத் பாபாஜன் என்பவரைச் சந்தித்ததே அது. 1914 ஜனவரியில் பாபாஜன் மேர்வானின் நெற்றியில் முத்தமிட்டுக் கடவுளை உணரும் ஆற்றலை அவருக்குக் கொடுத்து அவர் தம் இறையுணர்வின் முதிர்ந்த ஆற்றலை உணரும்படி செய்தார்.

படிப்படியாக அன்றைய முழு நிறைவு பெற்ற ஞானிகளான கேட்கானைச் சார்ந்த நாராயண் மகராஜரையும், நாகப்பூரைச் சார்ந்த தாஜுூன் பாபாவையும், ஷீரடியைச் சார்ந்த சாயி பாபாவையும் சந்தித்தார். சாயிபாபா அவரைக் கண்டதும் 'ஓ பர்வர்திகார்' (கடவுள், எல்லாம் வல்லவர் என்று பொருள்) என்று அழைத்து, அவரை சாகோரியைச் சார்ந்த உபாசனி மகாராஜைச் சந்திக்குமாறு உள் முகமாகவே ஆணையிட்டார். அடுத்து வந்த ஏழு ஆண்டுகளில் உபாசனி மகாராஜ் மேர்வானுக்கு தெய்வீக ஞானத்தை அளித்து, இக்காலத்து அவதார புருஷர் என்று பறைசாற்றி, தம் சீடர்களுள் பலரிடம் அவரைப் பின்பற்றுமாறு அனுமதித்தார். முதன் முதலாகத் தம்மிடம் நெருக்கமான சீடர்கள் சேரத் தொடங்கிய 1922லிருந்தே அவரது தெய்வீகச் செய்தி பரப்பும் செயல் தொடங்கிவிட்டது. அவருடைய இத்தகைய ஆரம்ப காலச் சீடர்களுள் ஒருவரே அவரை 'மெஹெர் பாபா' என்று அழைக்கத் தொடங்கினார். இதற்குக் 'கருணை காட்டும் தந்தை' என்பது பொருளாகும்.

தம் சீடர்களுக்குப் போதிய பயிற்சி அளித்த பின்னர் மெஹெர் பாபா அஹமத் நகருக்கருகில் மெஹெராபாத் என்னும் குடியிருப்பு (காலனி ஒன்றை) நிறுவினார். இங்கு மெஹெர் பாபா அவர்கள் தெய்வீக ஞானத்தில் பயிற்சியை வற்புறுத்தும் இலவசப் பள்ளி ஒன்றைத் தொடங்கினார். ஏழைகளுக்கு இலவச மருத்துவமனையும், மருந்தகமும், தங்குமிடமும், அமைத்தார் . அங்கு உயர்ந்த சாதிக்காரர்களுக்கும் தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப் படுபவர்களுக்குமிடையே எவ்வித வேறு பாடும் காட்டப்படவில்லை. ஆசானின் உள்ளுணர்வுத் தூண்டுதலால் அனைவரும் ஒன்றாகக் கூட்டாகக் கலந்து அறிவு வழியைப் பின்பற்றினர். மெஹராபாத்தில் பல்வேறு சாதிகள், இனங்கள், சமயங்கள், தேசங்களைச் சார்ந்தவரான தம் சீடர்க ளுக்கு அவர் அறவொழுக்கத்தையும், தெய்வ பக்தியையும், தெய்வீக உணர் வையும், தன்னலமற்ற பணியையும் பயிற்று வித்தார்.

இந்தச் செயல் முறைகள் மூலம் அவர் முழுமையான வாழ்க்கையில் ஆன்மீகத்

தூண்டுதலை ஏற்படுத்தியுள்ளார். உயர் நிலை மனச்சான்றை அடைய, புதிய விது ஆற்றலையும் செயலையும் அடைவதை நோக்கி நடத்திச் சென்று மனித சமுதாயம் முழுவதையும் சமூக, அரசியல், பொருளா தாரம், சமயம் மற்றும் இனம் தொடர்பான தளையிலிருந்து விடுதலை பெற அழைத்துச் சென்றும் மானிட ஆளுமை, பண்பாடு, கல்வி, ஆன்மீகத் துறைகளில் முழுமை யான வளர்ச்சி பெறத் தகுந்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

மெஹெர் பாபா 1925 ஜூலை 10ம் தேதி முதல் மௌனம் அனுஷ்டிக்கத் தொடங்கி தம் பூத உடலை நீத்த 1969 ஜனவரி 31 ஆம் தேதி வரை அதனைத் தவறாமல் பின்பற் றினார். அவருடைய பல உரையாடல்களும், செய்திகளும்,முக்கிய நூலான 'கடவுள் பேசு கிறார்' என்பது உட்பட நெடுங்கணக்குப் பலகை மூலம் கட்டுரைத்தார். 1954 அக்டோபர் 7 ஆம் தேதி முதல் இப் பலகையைப் பயன்படுத்துவதைக் கைவிட்டு, தம்மைச் சூழ்ந்துள்ளவர் களுக்குப் புரியும் வகையிலும் தெளிவான முறையிலும் தனிப்பட்ட வகையிலும்

சைகைகள் மூலம் மட்டுமே செய்திகளைத் தெரிவித்தார். மெஹெர் பாபா பல முறை மேற்கத்திய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 1931ல் முதன் முதலாக அவர் மேற்கத்திய நாடுகளுக்குச் சென்ற போது தம்முந்தைய மேற்கத்திய சீடர்களைச் சந்தித்தார்.அவர் மேற்கத்திய நாடுகளுக குக் கடைசியாகச் சென்றதும் உலகைச் சுற்றிப் பயணம் செய்ததும் 1958ல் தான், அப்போது அவர் தம் சீடர்களோடு, தம் பணிகளுக்காக அமைத்திருந்த அமெரிக் காவில் எஸ்.ஸி.மிர்டில் கடற்கரையிலிருந்த மையத்திலும் கீல் மலை ஆஸ்திரேலியாவில் குவீன்ஸ்லாந்தில் ஊம்பையில் இருந்த அவதாரத் தலத்திலும் தங்கியிருந்தார்.

இந்தியாவில் அவரை தரிசிப்பதற்கும் அவர் அருள் பெறுவதற்கும் ஆயிரக்கணக் கானவர் வந்து குவிந்தனர். சில சமயங் களில் இலட்சக்கணக்கான மக்களும் தம் வழிபாட்டைத் தெரிவிக்க வந்திருந்தனர். அவர் சந்நிதானத்தில் சில நாட்கள். அல்லது ஒரு நாள் அல்லது ஒரு மணி நேரமாவது தங்கியிருக்க உலக முழு வதிலுமிருந்து எண்ணற்றவர் பல நாட்கள் பயணம் செய்து வந்திருந்தனர்.

மெஹெர் பாபாவின் முக்கியமான செயல் இந்தியாவில் 'மாஸ்த்ஸ்' என்று அழைக்கப்படுவர்களுடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டதேயாகும். இவர்கள் ஆன்மீக வழியில் முன்னேற்றமடைந்துள்ள தீவிர யாத்திரிகர்களாவர். கடவுளை நேரிடையாக உணர்ந்து கொண்ட ஆன்மீக ஈர்ப்பாற்றல் பெற்றவர்கள், இதற்காக அவர் இந்தியாவிலும் இலங்கையிலும் மூலை முடுக்கெல்லாம் பல்லாயிரக்கணக்கான மைல்கள் பயணம்செய்துள்ளார். இத்தகைய நேரிடையான தொடர்பாலும் செயலாலும் மெஹெர் பாபா மனித இனம் முழுவதற்கும் ஆறுதல் அளித்ததோடு, முன்னேறிய ஆன்மாக்களின் உள்ளார்ந்த இயற்கை ஆற்றலை வெளிக் கொணர்ந்தார். இவர்கள் மனிதனிடம் உள்ள விழுமிய பண்பையும். நன்மையையும், புத்துணர்ச்சி கொண்டு செயலாற்ற ஆன்மீக வடிகால்களாக அமைந்தவர்கள், தவிர, முன்னேற்றமடைந்த சில ஆன்மாக்களால் மட்டும் அனுபவிக்கப்பட்டு வந்த ஆற்றலையும் விழிப்பு உணர்ச்சியையும் மனித இனம் முழுதும் பெறும்படி செய்தார்.

மற்றொரு முக்கியமான செயல் தொழு நோயாளர்கள் மற்றும் ஏழைகளின் கால்களைக் கழுவுவது; அனாதைகளுக்கு உணவும், உடையும், பணமும், அளிப்பது; தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்டு வந்தவர்களின் குழந்தைகளைக் குளிப்பாட்டுவது; அவர்கள் ஆடைகளையும் மலஜலம் கழிக்குமிடங்களையும், தூய்மைப் படுத்துவது; தொழுநோயாளர்கள், ஏழைகள், தீண்டத்தகாதவர்கள் பற்றிய மனிதனின் மனப்போக்கை மாற்றியதும் அவர்கள் நிலையை உயர்த்த முயற்சிகள் மேற்கொண்டதும் அவதார புருஷர் நம் காலத்தில் ஆற்றிய அரும் பணிகளாகும்.

மெஹெர் பாபா தம்மை மிகப் பழமையான ஒன்றாக, கடவுளாக, உறுதிப்படுத்திக் கொண்டு, மனிதனை அறியாமைத் தளையிலிருந்து விடுவிக்கவும், அவனது உண்மையான தன்னியல்பை, அதாவது கடவுள் தன்மையை, உணரவும் மறுபடி அவதாரம் செய்து வந்துள்ளதாகவும் வலியுறுத்தினார். அவர் 1953 செப்டம்பர் 7

ஆம் தேதி டேராடூனில் 'உயர்வில் மிக உயர்வு' என்ற தலைப்பில் பிரகடனப் படுத்திய செய்தியின் ஒளியால் உணர்வு பெற்ற, உலக முழுவதுமுள்ள பல்லாயிரக் கணக்கான பக்தர்கள், அவரை இக் காலத்து அவதார புருஷர் என்றே ஏற்றுக் கொண்டனர். அவருடைய அன்புச் சுழற் சியில் அகப்பட்ட அடியவர்கள் மெஹெர் பாபாவை முழு நிறைவு பெற்றவர்களுள் கிடைத்தற்கரிய ஒருவராகவும் உலகம் கொடுந்துன்பத்தில் சிக்கித் தவிக்கும் போது அவதாரம் செய்பவராகவும், புதிய பாதையை நோக்கிப் புதிய சகாப்தம் படைக்க உலகத்தை நடத்திச் செல்பவ ராகவும் மதித்தனர். மக்களினத்தின் காப் பாளாரான கடவுள் 1894 பிப்ரவரி 25 ஆம் தேதி முதல் 1969 ஜனவரி 31 முடிய மெஹர் பாபா வடிவில் மீண்டும் உலகில் அவரதாரம் செய்து நடமாடினார்.

மக்கள் மனதிலெல்லாம் குடிகொள்ளக் கருதி மெஹெர் பாபா 1969 ஜனவரி 31 ஆம் தேதி தம் பூதவுடலை நீத்தார்.

மெஹெர் பாபா 'நான் வந்திருந்தேன், நான் வந்திருக்கிறேன், நானே அப் பழம் பொருள்' என்று உறுதி மொழிந்தார்.

(அஹமத் நகர்) மேஹெராபாத்திலுள்ள மெஹெர் பாபாவின் கோயில் (சமாதி) உலக முழுவதிலுமிருந்து அவருடைய பக்தர்கள் புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஒரு தெய்வீகத் தலமாக விளங்குகிறது. ஒவ் வோர் ஆண்டும் அவர் அமரரான திதியன்று ஜனவரி 31 ஆம் நாளன்று, இந்தியா விலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்குக் கூடி இக்கால அவதார புருஷரான அவருக்குத் தம் இதயாஞ்சலியை மனப்பூர்வமாகச் செலுத்துக்கின்றனர்.

## மனித இனத்துக்கு ஒரு நற்செய்தி
## The Universal Message

நான் அவதரித்தது பாடம் கற்பிக்க அன்று; விழிப்படையச் செய்வதற்கே. ஆகவே நான் கட்டளையிட வந்தேன் என்று கருத வேண்டாம்.

தெய்வீக நிலையில் நான் கொள்கை களையும் கட்டளைகளையும் விதித்தேன்.

ஆனால் அவற்றை மனித இனம் அலட்சியப் படுத்தி விட்டது. கடவுளின் கட்டளைகளுக் கேற்ப மனிதன் வாழத்திறமற்றிருப்பது அவதார புருஷரின் போதனைகளைக் கேலிக்குரியதாக்குகிறது. கடவுள் அருளிய கருணை வழிகளைச் செயலாற்றுவதற்கு மாறாக அவர் பெயரால் மனிதன் சமயப் போராட்டங்களை நிகழ்த்தியுள்ளான். கடவுள் கூறிய பணிவு, அடக்கம், தூய்மை, உண்மை இவைகளைப் பின்பற்றி வாழ்வதற்கு மாறாக மனிதன் வெறுப்புக்கும் பொறாமைக்கும் கொடுஞ் செயல்களுக் குமே வழிவகுத்துவிட்டான்.

கடந்த காலங்களில் கடவுள் விரித்த கொள்கைகளுக்கும் கட்டளைகளுக்கும் செவி சாய்க்காமல் செவிடனாய் மனிதன் இருந்து வந்த காரணத்தாலே இந்த அவதார காலத்தில் நான் மௌனத்தை அனுஷ்டிக்கிறேன். இவ்வளவு காலம் நீங்கள் வேண்டிக் கொண்ட அறிவுரைகள் உங்களுக்குப் போதுமான அளவில் கொடுக் கப்பட்டிருக்கின்றன. இப்போது அவற் றைப் பின்பற்றி வாழ்வது மட்டுமே உங்கள் கடமை. கடவுளின் மிக மிக அருகில் செல்ல நீங்கள் 'நான்' 'என்னை' 'எனக்கு' 'எனது'

என்ற சுயநலங்களிலிருந்து விலகி விலகிச் செல்ல வேண்டும். நீங்கள் வேறு எதையும் துறக்க வேண்டாம். உங்களது 'நான்' என்ற அகம்பாவத்தை மட்டும் துறத்தல் போதும். அது விடுவதற்கு மிகக் கஷ்டமாகத் தோன்றினாலும் மிக மிக எளிதாகும். உங்களது வரையறுக்கப்பட்ட அகம் பாவத்தை என் அருளால் துறப்பது மிக எளிதாகும். அத்தகைய அருளை உங்களுக்கு அளிக்கவே நான் அவதரித் துள்ளேன்.

நான் உங்களுக்கு கட்டளைகள் இட வந்தவனல்லன் என்பதை மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன் .நான் உங்களுக்கு வாரி வழங்க வந்த உண்மைப் பெருக்கை இப்போது அருளவே வந்துள் ளேன். அப்போது மனிதர்களின் அன்றாட வாழ்க்கையே உயிர் வாழும் கட்டளை களாகும். அப்போது நான் பேசாத சொற் களெல்லாம் உயிர் பெற்று நடைமுறையில் நிகழும்.

மனிதனின் அறியாமையாகிய திரையா லேயே நான் என்னை மறைத்துக் கொண்டு சிலருக்கு மட்டுமே என் பெருமையை வெளிக் காட்டுகிறேன் இக்காலச் சூழ்சியில்

தற்போதைய என் அவதாரமே கடைசியான
தாகையால் இதன் பெருமை அதிகமாகும்.
என் மௌனத்தைக் கைவிடும் போது என்
அன்பின் விளைவு மனித இனம் முழு
வதற்கும் கிடைக்கும். எல்லாரும் அந்த
அன்பை அறிந்து உணர்ந்து அதைப் பெறு
வார்கள். ஒவ்வொருவனும் தன் வழி
யிலேயே தன் தளைகளிலிருந்து விடுபட அது
பெரிதும் உதவும். நீங்கள் உங்களை
நேசிப்பதைவிட உங்களை அதிகமாக
நேசிக்கும் தெய்வீக அன்புள்ளவனே நான்.
உங்களுக்கு உங்கள் உண்மையான
ஆன்மாவை உணரப் பெரிதும் உதவியா
யிருப்பது என் மௌனக் கலைப்பேயாகும்.

இன்றைய உலகக் குழப்பங்களும்
கொடிய விளைவுகளும் தவிர்க்க
முடியாதவை. இதற்கு யாரையும் குறை
கூறத் தேவையில்லை. எது நிகழ வேண்
டுமோ அது நிகழ்ந்தது. எது நிகழ
விருக்கிறதோ அது கட்டாயம் நிகழ்ந்தே
தீரும். உங்களிடையே நான் அவதாரம்
செய்திருப்பதைத் தவிர இக்கஷ்டங்களுக்கு
வழியே இருந்ததில்லை. நான் அவதரிக்க
வேண்டியிருந்தது; நான அவதரித்திருக்
கிறேன் நானே தொன்மையான ஒன்றா
வேன்.

**மெஹர் பாபா**

## கடவுளை நேசிப்பது எப்படி?
## How to Love God?

கடவுளை நேசிப்பதற்கு மிகவும் ஏற்ற பயிற்சி உங்களைப் போன்ற அனைவரையும் நீங்கள் நேசிப்பதேயாகும். அப்படியே மற்றவர்களையும் நேசித்தால் அதுவே கடவுளை நேசிப்பதாகும்.

மற்றவர்களுடைய குறைகள் காண்பதற்குப் பதிலாக நாம் நம்மையே சோதித்துக் கொள்ள முனைந்து விட்டால் நாம் கடவுளை நேசிப்பராவோம்.

நமக்கு உதவிக் கொள்வதற்குப் பிறரைக் கொள்ளையடிப்பதற்கு மாறாக, பிறருக்கு உதவுவதற்காக நம்மையே கொள்ளை கொள்ளுதலே கடவுளை நேசிப்பதற்கு வழியாகும்.

மற்றவர் துன்பங்களைக் கண்டு நாமும் துன்புற்று, மற்றவர் இன்பங்கண்டு நாமும் இன்புறுவதே கடவுளை நேசிக்கும் வழியாகும்.

நம் துரதிர்ஷ்டங்களுக்குக் கவலைப்

படுவதற்கு மாறாக மற்ற எல்லாரையும் விட நாம் பேரதிர்ஷ்டம் பெற்றவர்களாகக் கருதும் போது தான் நாம் கடவுளை நேசிப்பவர்களாவோம்

நாம் நம் விதியைப் பொறுமையுடனும், அமைதியுடனும், அது கடவுளின் விருப்பம் என்று தாங்கிக் கொண்டோமானால் அப்போது தான் கடவுளை நேசிப்பவர்களாவோம்.

கடவுளின் படைப்பான பிற உயிர்களுக்குத் தீங்கோ துன்பமோ நாம் விளைவிக்காமலிருப்பதே கடவுளை முழு ஈடுபாட்டுடன் வழிபாடு செய்யும் சிறந்த வழியாகும் என்று புரிந்து கொள்ளும் போது தான் நாம் கடவுளை நேசிப்பவர்களாவோம்.

எல்லோராலும் கட்டாயம் நேசிக்கப்பட வேண்டியவரான கடவுளை நேசிக்க நாம் கடவுளுக்காக வாழ வேண்டும். கடவுளுக்காக இறக்க வேண்டும். ஏனெனில் எல்லா உயிர்களுக்கும் கடவுளை நேசிப்பதே நோக்கமென்றும் அவனிடம் நாம் நம் ஆன்மாவைக் காணலாமென்றும் உணர வேண்டும்.

மெஹெர் பாபா

# ஏழு உண்மைகள்
# The Seven Realities

மெஹெர் பாபா இனம், கொள்கைகள், சாதி மற்றும் சமயச் சடங்குகள், வழிபாட்டு முறைகள் முதலியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பின்வரும் ஏழு உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கே முக்கியத்துவம் அளித்துள்ளார்.

1. ஒவ்வோர் (வரையறைக்குட்பட்ட) உயிரிலும் ஆன்மாவாக விளங்கும் கடவுள் ஒருவரே உண்மையாக இருப்பவராவார்.

2. உண்மையான அன்பாவது வரையறையற்ற ஒன்றை கடவுளை நேசிப்பதேயாகும். அது அந்த உண்மைப் பொருளை (கடவுளை)ப் பார்க்க, அறியத் தீவிர ஆர்வத்தை விளைவித்து அவ்வுண்மைப் பொருளுடன் இணையச் செய்யும்.

3. உலகக் கடமைகளுக்கிடையிலும் சுயநல எண்ணங்களையும் விருப்பங்களையும் துறப்பதே உண்மையான துறவாகும்.

4. இந்த அன்பைப் பின்பற்றுவதற்காக உடல், மனம் நிலைமை, நல்வாழ்வு மற்றும் வாழ்க்கையையே தியாகம் செய்வதே உண்மையான தியாகமாகும்.

5. நல்லவர் உள்ளேயும், கெட்டவரென்று கருதப்படுவருள்ளேயும், ஞானிகளிடமும், பாவிகளென்று கருதப்படுவரிடமும் ஆக அனைவரிடமும் கடவுள் விளங்குகின்றார் என்று அறிவதே உண்மையான அறிவாகும். இத்தகைய அறிவானது எந்த வித வெகுமதியையும் எதிர் பார்க்காமல் சந்தர்ப்பம் நேரும் போது எல்லாரையும் சமமாகக் கருதவும், விவாதத்தில் ஈடுபட நேரிட்டால் சிறிதும் பகைமையும் வெறுப்புமின்றி கலந்து கொள்ளச் செய்யவும், ஒருவரோடொருவர் சகோதரத்துவ உணர்வுடன் பழகி மகிழ்ச்சி பெறச் செய்யவும், உங்களுக்குத் தீமை செய்பவருக்கும் மனம்மொழி மெய்களால் தீமை செய்யாதிருக்கவும் உங்களுக்கு உதவி செய்யும்.

6. கீழ்த்தர ஆசைகளில் ஈடுபடாமல் பொறி புலன்களைக்கட்டுப்படுத்த உதவும் ஒழுக்கமே உண்மையான கட்டுப்பாடான ஒழுக்கமாகும். அது ஒன்றே ஒழுக்கத்திற்கு வழி கோலும்.

7. எந்த வித எதிரிடையான நிலையிலும் கலங்காத சமநிலையும், எந்தவிதக் கொடுமையிலும் கடவுளின் விருப்பத்திற்கேற்ற முழுமையான அமைதியில் ஒவ்வொருவரும் ஈடுபடுவதுமே உண்மையான சரணாகதியாகும்.

**மெஹெர் பாபா**

# ACKNOWLEDGEMENTS

I hereby acknowledge with thanks, permission given by the Chairman, Avatar Meher Baba P. P. C. Trust, Ahmednagar, to quote the words of Avatar Meher Baba.

I also express my gratitude to Sadhu V. Rangarajan, Meelan Studio and to all our donors and well-wishers.

*V. Sita Ramayya*
*Managing Trustee*
Avatar Meher Baba
Tamilnadu Centre

❤ ❤ ❤

## அவதார் மெஹெர் பாபாவின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

அவதார் மெஹெர்பாபா பூனாவில் 25.2.1894-ல் பிறந்தார். அவருடைய பிறந்த நாள் நூற்றாண்டு விழா இந்தியாவிலும் பிற நாடுகளிலும் 25.2.1994 முதல் கொண்டாடப்பட்டது.

## அவதார் மெஹெர் பாபா
## தமிழ்நாடு மையத்தின் வெளியீடுகள்

- அவதார் மெஹெர் பாபாவின் வாழ்க்கைச் சுருக்கமும், செய்திகளும், 1997, 16 pp. (Re. 1.00)
- தெய்விக நன் முத்துக்கள் 1997, 32 pp. (Rs. 2.00)
- அவதார் மெஹெர் பாபா அழைக்கிறார் 1991, 90 pp. (Rs. 5.00)

இந்த புத்தகம் ஆங்கிலம், தெலுங்கு, மலையாலம், கன்னடம், ஹிந்தி மற்றும் மராத்தியிலும் வெளியிடப்பட்டுள்ளது.